**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 118/2022**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | தேவராஜ்(PW1) | | |
| Father's Name | செல்வன் | தொழில் | |
| Village | கருவலூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 38 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி ஆஜர்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கு விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் காலமான சீனிவாசன் என்னுடைய உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். சீனிவாசனை கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு சென்று தான் நான் பார்த்தேன். நான் கோவை மருத்துவமனைக்கு சென்றபோது என் சகோதரர் சீனிவாசன் காலமாகிவிட்டார். போலீசார் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்று பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்து எழுதிக் கொண்டு என்னிடம் புகாரில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீஸ் எழுதி வைத்ததால் தாளில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் சகோதரர் காலமானதற்கு நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்திலும் சொன்ன முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளவாறு வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறும் நோக்கத்தோடு நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |